# பிசினஸ் சைக்கிள் ஃபண்ட் முதலீடு

## - நீங்கள் அறிய வேண்டியவை...

பருவ நிலைகளில் சுழற்சிகள் (cycles) ஏற்படுவது போல் பொருளாதாரத்திலும் சுழற்சிகள் நிகழக்கூடும். பொருளாதாரத்தில் நான்கு சுழற்சிகள் இருக்கின்றன. அதிக வளர்ச்சி மற்றும் மீட்சி (Growth & Recovery), இவ்விரு சுழற்சிகளில் பொருளாதாரச் செயல்பாடு சிறப்பாக இருக்கும். அதுவே மந்தநிலை மற்றும் நெருக்கடி (Depression & Recession) சுழற்சிகளில் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைவதைக் காணமுடிகிறது. இவ்வாறு ஒவ்வொரு சுழற்சிகளின் ஊடான பொருளாதாரத்தின் பயணத்தையே வணிக சுழற்சி (Business cycle) என்கிறோம். பொருளாதார சுழற்சிகள் ஏன் நிகழ்கின்றன? மாறுபடும் வட்டி விகிதம், பணவீக்கம் உள்ளிட்ட பலவற்றை இதற்குக் காரணங்களாகச் சொல்லலாம்.

இந்தப் பொருளாதார சுழற்சியின் காலமும், ஒரு முழு வணிக சுழற்சிக்கான காலமும் ஒன்றாக இருப்பதில்லை. எனவே எப்போது ஒரு சுழற்சி தொடங்கும் அல்லது முடியும் என்பதை யாராலும் சுலபமாகக் கணித்துவிட முடியாது. இருப்பினும் சில அறிகுறிகள் மூலம் சுழற்சிகளில் ஏற்படும் மாற்றங்களை நாம் கண்டுகொள்ள முடியும். உதாரணமாக, வங்கிக் கடன் வாங்குவது அதிகரித்தால், மூலதன பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு கிடைக்கும் பணி ஆணைகள் அதிகரித்தால், அது பொருளாதாரத்தின் மீட்சிப் பருவமாக இருக்கும். அதிக பணவீக்கமும், அதிக வட்டி விகிதமும் சேர்ந்துகொண்டால் எதிர்கால வளர்ச்சி குறையக்கூடும். இருந்தாலும் ஒவ்வொரு அறிகுறிக்கும், அது ஏற்படுத்தும் மாறுபாட்டுக்கும் இடைப்பட்ட காலத்தைக் கணிப்பது கடினம் என்பதை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

வெவ்வேறு வகையான பொருளாதார சுழற்சிகளில், வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு வியாபார சுழற்சிகள் வெளிப்படக்கூடும். எனவே, சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட வியாபார சுழற்சி, வேறு ஒரு வகையான பொருளாதாரத்திற்குத் தேவையான வியாபார வாய்ப்புகளை வழங்கவும் வாய்ப்புள்ளது.

வணிக சுழற்சியை மையமாகக் கொண்ட ஒரு மியூச்சுவல் ஃபண்ட், பொருளாதார நிலைகளைப் பொறுத்து சிறப்பாக செயல்படும். அது பல துறைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும். உதாரணமாக, அந்த மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டுக் கலவையில் (Portfolio) 3 முதல் 5 வகையான வெவ்வேறு துறைகளை சேர்ந்த நிறுவனப் பங்குளை கொண்டிருக்கும். செக்டோரல் அல்லது தீமெட்டிக் ஃபண்டுகள் (Sectoral or Thematic Funds) குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்த முதலீடு அமைந்திருக்கும். ஆனால் பிசினஸ் சைக்கிள் ஃபண்டில் வியாபார சுழற்சியில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில், முதலீடு செய்யப்படும் துறைகள் மாறிக்கொண்டே இருக்கும்.

ஐ.சி.ஐ.சி.ஐ புருடென்ஷியல் பிசினஸ் சைக்கிள் ஃபண்ட் (ICICI Prudential Business Cycle Fund), ன் புதிய ஃபண்ட் வெளியீட்டில் (NFO) இணைவதன் மூலம் சிறந்த ஃபண்ட் மேனேஜரின் நிபுணத்துவத்தையும், காலத்தைக் கடந்து சிறப்பாக செயல்படும் பங்கு சார்ந்த முதலீட்டுக் கலவையையும் பெற முடியும். இந்த என்.எஃப்.ஓ ஜனவரி 12, 2021 அன்று நிறைவடைகிறது.





**வி. வெங்கடேசன் & எஸ். இந்திராணி,**
இயக்குநர்,
ஸ்டாக் ஃபோக்கஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட்



ICICI/21